



அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தூய்மைப் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கி, சமபந்தி விருந்தில் கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்களுடன் உணவருந்தினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சனா சௌதரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர்கிராமம் பொருநை அருங்காட்சியகப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ,கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மைதீன்கான், முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், தினேஷ்,தொல்லியல் துறை இயக்குனர் யத்தீஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.அதனை தொடர்ந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

### தேங்காய் பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில்

# ரூ.60 கோடியில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள்!

## முதல்வருக்கு குமரி மீனவர்கள் நெஞ்சார்ந்த நன்றி!

## மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

குமரி, டிச. 11 -

“தேங்காய் பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.60 கோடியில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கன்னியாகுமரி பெரிய நாயகி தெரு மீனவ கிராமத்தில் ரூ.26 கோடியில் மீன் இறங்கு தளப் பணிகள் முடிவடைந்து இத்திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். இதனையொட்டி குமரி மாவட்ட மீனவ மக்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தார்கள்” என்று கழக மீனவர் அணி செயலாளரும் மீனவர் நல வாரியத் தலைவருமான அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



இது குறித்து மாநில மீனவர் அணி செயலாளரும், மீனவர் நலவாரிய தலைவருமான ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

“ கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளும், கன்னியாகுமரி பெரியநாயகி தெரு மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மீன் இறங்கு தளமும் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதற்காக முதல்வர் அவர்களால் கழக ஆட்சியில் நிதி ஒதுக்கப்பட்டு, இப்போது பணிகள் முடிவடைந்த நிலையில் முதல்வர் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. இது குமரி மீனவ மக்களுக்கு மிக அதிக பயன் அளிக்கும் திட்டங்களாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீன்பிடி துறைமுகங்களில் மிகவும் முக்கியமான ஒன்று தேங்காய் பட்டினம். கழக ஆட்சி அமைந்த நாள் முதல் தேங்காய்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் உரிய கவனம் செலுத்திய தோடு, அங்கு விபத்துக்கள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் அதிக நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த 2022-2023 ஆம் நிதி யாண்டில் மட்டும் தேங்காய் பட்டினத்தில் அலை தடுப்பு சுவரை நீட்டிக்க 116 கோடி ரூபாய் ஒதுக்கியது திராவிட மாடல் அரசு. இதன் காரணமாக தேங்காய் பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் அடிக்கடி நடைபெற்று வந்த விபத்துகளும் தவிர்க்கப்பட்டது.

இந்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேங்காய் பட்டினம் மீன்பிடி துறைமுகத்திற்கு கூடுதலாக 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருந்தார். அதில் தேங்காய் பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் 350 மீட்டர் நீள படகு அடையும் தளம், 110 மீட்டர் நீளத்திற்கு அமையப்பட்ட படகு அணையும் சுவர், மீன் ஏலக் கூடம், பதப்படுத்தும் குளிர்பதனக் கூடம், வாய்க்கால் பாலம் மற்றும் சாலை ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆயிரக்கணக்கான மீனவர்கள் பயன்பெறுவார்கள். இப்போது பல மேற்கொள்ளப்பட்டிருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளினால் 850 விசைப்படகுகளையும், 4800 நாட்டுப்படகுகளையும் பாதுகாப்பாக தேங்காய் பட்டினம் மீன்பிடித் துறை முகத்தில் நிறுத்த இயலும்.

**ரூ. 26 கோடியில் பெரிய நாயகி தெருவில் மீன் இறங்கு தளம்!**

இதேபோல் கன்னியாகுமரி பெரியநாயகி தெருவில் மீன் மீன் இறங்கு தளத்துடன் 250 மீட்டர் நீளத்திற்கு தூண்டில் வளைவு நீட்டிப்பு, வலை பின்னும் கூடம் ஆகியவையும் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 13021 மீனவர்கள் பயன்பெறுவார்கள். இப்போது அங்கு செய்யப்பட்டிருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளால் 235 இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகளும், ஆறு நாட்டுப் படகுகளும் பாதுகாப்பாக நிறுத்தப்பட இயலும். தி.மு.க. ஆட்சி காலத்தில் குமரி மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களையும், ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி தரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, குமரி மாவட்ட மீனவர் மக்களின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.”

இவ்வாறு அ.ஜோசப் ஸ்டாலின் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### இந்தியா முழுவதும் 550 க்கும் மேற்பட்ட ‘இண்டிகோ’ விமானங்கள் ரத்து!

# இது வெறும் செயல்பாட்டுக் குறைபாடு அல்ல; ஒன்றிய அரசின் தோல்வி!

## புலம்பெயர் தமிழர்கள் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

சென்னை, டிச. 11 -

இந்தியா முழுவதும் 550 க்கும் மேற்பட்ட இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன, நாம் பார்ப்பது வெறும் செயல்பாட்டுக் குறைபாடு அல்ல ஒன்றிய அமைச்சகத்தின் தோல்வி என்று தமிழ்நாடு அரசின் புலம்பெயர் தமிழர்கள் நல வாரிய தலைவர், கழக சுற்றுச் சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா முழுவதும் 550 க்கும் மேற்பட்ட இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன, இதனால் விமான நிலையங்கள் நிரம்பி வழிகின்றன மற்றும் ஆயிரக்கணக்கான பயணிகள் தமிழ்நாடு மற்றும் உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்தோர் உட்பட தகவல், உதவி அல்லது அடிப்படைத் தேவைகள் கூட இல்லாமல் சிக்கித் தவிக்கின்றனர். நாம் பார்ப்பது வெறும் செயல்பாட்டுக் குறைபாடு அல்ல, மாறாக ஒரு முறையான சரிவு: கொள்கை, ஒழுங்குமுறை, தயார்நிலை மற்றும் ஒன்றிய அமைச்சகத்தின் பொறுப்பு ஆகியவற்றின் தோல்வி.

இந்த முன்னோடியில்லாத இடையூறு, இப்போது தொடர்ந்து இரண்டாவது நாளாக நுழைகிறது, சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் யூனியன் அரசாங்கத்தின் இரட்டை மற்றும் ஏகபோக போக்குகளை ஊக்குவிப்பது ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் அமைப்பையும் எவ்வாறு பலவீனப்படுத்தியுள்ளது என்பதை அம்பலப்படுத்துகிறது. நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பில் கவனம் செலுத்துவதற்கும், சேவை நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கும் பதிலாக, தேசிய உரையாடல் பெரும்பாலும் பொருத்தமற்ற விஷயங்களுக்கு ராமாயணத்தில் உள்ள புராண விமானங்களிலிருந்து பிற கவனச்சிதறல்களுக்கு முக்கிய நிர்வாக பொறுப்புகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

மில்லியன் கணக்கான பயணிகள், குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து பயணிப்பவர்கள் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் ஆற்றல்மிக்க புலம்பெயர்ந்த மாநிலங்களில் ஒன்றான மாநிலம் நிலையான மற்றும் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட விமான வலையமைப்பைச் சார்ந்துள்ளது. இந்தக் குழப்பம் குடும்பங்கள், வணிகப் பயணிகள், மாணவர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தாயகம் திரும்பும் உலகத் தமிழ்ச் சமூகத்தை ஆழமாகப் பாதித்துள்ளது.

ஆயினும்கூட, பொறுப்புக்கூறல் இல்லை, வெளிப்படையான தகவல் தொடர்பு இல்லை, ஒன்றிய அமைச்சகம் அல்லது அமைச்சரவையின் பதிலில் அவசரம் இல்லை.

பிரதமர் உடனடியாக தலையிட்டு, ஒழுங்கை மீட்டெடுக்க வேண்டும், மேலும் இந்த கேலிக்கூத்தான மற்றும் தவிர்க்கக்கூடிய நெருக்கடியை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். ஏகபோக கொள்கைகள் மற்றும் தவறான முன்னுரிமைகளால் அல்ல தகுதி, ஒழுங்குமுறை மற்றும் பொது நலன் ஆகியவற்றால் இயக்கப்படும் சிவில் விமானப் போக்குவரத்து அமைப்புக்கு இந்தியா தகுதியானது என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – டிச.20ல் திறந்து வைக்கிறார்!

# பாளையங்கோட்டை - குலவணிகர் கிராமம் ‘பொருநை அருங்காட்சியகம்’ பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

நெல்லை, டிச.11-

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்கிராமம் பொருநை அருங்காட்சியக பணிகளை நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார்,நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ., திரு நெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, தொல்லியல் துறை இயக்குநர் து.யத்தீஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (09.12.2025) பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றினை உலகறியச் செய்யும் பொருட்டு கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் கிடைத்த தொல் பொருட்களை காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம் குலவணிகர்புரம் கிராமத்தில் அருங் காட்சியகம் அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. பொதுப்பணித்துறை சார்பில் ரூ.56.60 கோடி மதிப்பீட்டில் 13 ஏக்கர் நிலத்தில் 54 ஆயிரம் சதுர அடியில் ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டடம் 16,486 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் தளமும், சிவகளை கட்டடம் 8,991 சதுர அடியில் தரைதளம், முதல் தளமும், கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17,429 சதுர அடி தரைதளம், முதல் தளத்துடன் கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும், ஒவ்வொரு கட்டடத்திற்கு இணைப்பு சாலை அமைக்கவும், அழகுநிறைந்த குளமும், குளத்தின் மீது பாலம் அமைக்கவும், சுற்றுச்சுவர், பூங்காக்கள், வண்ண விளக்குகள், நீறுற்று, சுற்றுச் சூழல் திறந்த வெளி திரையரங்கு அமைப்புகள், திறந்தவெளி கூட்டரங்கம் போன்ற பல்வேறு பணிகள் மக்களை கவரும் வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.வயதானவர்கள் சென்று பார்க்கும் வகையில் பேட்டரியால் இயங்கும் வாகன வசதி செய்துதரப்படவுள்ளது. தொல்லியல் துறையின் மூலம் ரூ.6 கோடி மதிப்பில் காட்சிப்படுத்தும் கூடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, காட்சிப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு பொருநை அருங்காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வரும் 20.12.2025 அன்று திறந்து வைத்து, பார்வையிடவுள்ளார்கள்.

தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும்,புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள்.

மேலும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறவுள்ள திருநெல் வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு,நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், கண்காணிப்பு பொறியாளர் ஸ்ரீதரன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம் மைதீன்கான், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், நடராஜன், சாந்தி சுபாஷ்,மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் (மேற்கு) தினேஷ் (கிழக்கு) மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் செல்வ கருணாநிதி, அலெக்ஸ் அப்பாவு, ஆரோக்கிய எட்வின், கண்ணன், அன்பழகன், அருள்மணி, மாரியப்பன், சுபாஷ் தங்கபாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், செல்வசூடாமணி, பிரேம் ஆனந்த், அனிதா, மண்டலத் தலைவர்கள் கதீஜா இக்லாம் பாசிலா, பிரான்சிஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், பகுதி பொறுப்பாளர் அண்டன் செல்லதுரை, கீர்த்தி சுரேஷ், மாமன்ற உறுப்பினர் ஜூலியட் மேரி, விவசாய தொழிலாளர் அணி தலைவர் செண்டு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அண்ணா அறிவாலயம் ஊழியர்

# தா. முரளிதரன் இளைய சகோதரர் தா.நாகேஸ்வரன் மறைவு!

## சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. – கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, டிச.11-

தி.மு.க. தலைமை அலுவலகம் அண்ணா அறிவாலயத்தில் பணிபுரியும் தா. முரளிதரன் அவர்களின் இளைய சகோதரர் தா. நாகேஸ்வரன் (வயது 61) அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (09.12.2025) அதிகாலை 1.30 மணியளவில் மறைவெய்தினார்என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



நாகேஸ்வரன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தீவிர கழகப்பணி மேற்கொண்டவர். காஞ்சிபுரம் மாநகர் 34 வார்டில் கழகம் வளர்த்தவர்களில் முக்கிய பங்காற்றியவர் ஆவார். காஞ்சிபுரம் முருகேசன் அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட போது அவரது வெற்றிக்காக தீவிர பணியாற்றியவர். அதே போன்று காஞ்சிபுரம் சட்டமன்றம், நாடாளுமன்றத் தேர்தல்களில் கழகத்தின் வெற்றிக்காக அயராது பணி யாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பால் மிகுந்த பற்று கொண்டவர் ஆவார்.

மேலும் காஞ்சிபுரம் கழக முன்னணி தலைவர்களுடன் நெருக்கமான தொடர்புடையவர். கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். சட்டமன்றம், நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் கழகம் அறிவிக்கும் வேட்பாளர்களின் வெற்றிக்காக தீவிரமாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அப்பேற்பட்ட கழக செயல்வீரர் நாகேஸ்வரன் அவர்கள் உடல் நலம் குன்றி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (9.12.2025 - செவ்வாய்க்கிழமை)விடியற் காலை 1.30 மணியளவில் மறைவுற்றார்.

இவர் மறைவுச் இச்செய்தி அறிந்தவுடன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுகுமார், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், மாநில தொண்டர் அணித் தலைவர் ஜி. சுகுமார், மாநகரச் செயலாளர் தமிழ்ச் செல்வன், மாநகர அவைத் தலைவர் கே.ஏ. செங்குட்டுவன், மாநகர் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதிச் செயலாளர்கள் எஸ். சந்துரு, கே. திலகர், அ. தசரதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், சன்பிராண்ட் ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், 34வது வட்டச் செயலாளர் ஸ்ரீபால், 24வது வட்டச் செயலாளர் சங்கர், இளைஞர் அணி அருண், மற்றும் சுரேஷ், கருணாநிதி, குட்டி, ஞானசேகரன், தேவரசன், அருணாச்சலம் மற்றும் கழக முன்னணியினர், கழக உடன்பிறப்புகள் நேரில் சென்று அவரது உடலுக்கு மரியாதை செலுத்தினார்கள்.



சென்னை பல்கலைக்கழக முதுகலை மாணவர்கள் விடுதியின் அடிப்படை வசதிகள் குறித்து நேற்று முன்தினம் (09.12.2025) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், பதிவாளர் முனைவர் ரீட்டாஜான் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.